**நகர் மன்ற அவசரக்கூட்டப்பொருள்**

2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12.09.2019 தேதி வியாழக்கிழமை மாலை 11.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள அவசரக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரீசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் எண் TN 50 U 0518- என்ற வாகனத்தின் ஆறு டயர்கள், டியூப், மற்றும் பிளாப் ஆகியவைகள் வாங்கி 9 வருடங்கள் ஆகியுள்ளது. எனவே தற்போது டயர்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதியதாக 6 டயர்கள், டியூப், பிளாப் ஆகியவை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.58,000/-க்கும், மேலும் இவ்வாகனத்திற்கு எதிர்வரும் 26.10.2019 உடன் ஆய்வுச்சான்று முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு வாகனத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள பழுதுகள் சரி செய்து ஆய்வுச்சான்று பெறவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

பழுதுகளின் விபரம்

1. வாகனம் முழுவதும் சர்வீஸ் செய்தல்
2. நான்கு வீல் சரி பார்த்து கிரீஸ் பேக் செய்தல்
3. ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல்
4. செல்ப் மோட்டார் சர்வீஸ் செய்தல்
5. டைனமோ சர்வீஸ் செய்தல்
6. ஆயில் பில்டர் புதிதாக மாற்றுதல்
7. டீசல் பில்டர் அனைத்தும் மாற்றுதல்
8. ஜாயிண்ட் யோக், டீத் மாற்றுதல்
9. பெயிண்டிங் செய்து பெயர் ரிப்ளைட் ஸ்டிக்கர் மற்றும் ஆய்வுச் சான்று பெற்று தருதல்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 329/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 570** **நாள் 12.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 2**

இந்நகராட்சி உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை சிறு சிறு மேடைகளாக அமைத்து மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை பிரித்திட ஏதுவாக 20 அடி நீளம், 5 அடி அகலமும், 5 அடி உயரமும் ஆக்கிடவும் தினசரி வரப்பெற்ற குப்பைகளை 5 அடுக்காக அமைத்திட JCB இயந்திரம் மூலம் 1 மணி நேரத்திற்கு ரூ.950/- வீதம் 120 மணி நேரத்திற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.1.14.000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 794/2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 571** **நாள் 12.09.2019**
**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 3**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் 07/09/2019 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் டெங்கு தடுப்பு பணிகளுக்காக முதிர்கொசுக்களை அழிப்பதற்கு பயன்படும் புகைமருந்து தெளிப்பான்கள் போதிய அளவில் வைத்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உள்ள பெரிய புகைமருந்து தெளிப்பான பயன்படாத நிலையில் உள்ளது. எனவே தற்போது இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக ஒரு பெரிய புகைபோக்கி இயந்திரம் (Pulse Fog) வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 805//2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 572** **நாள் 12.09.2019**
**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 4**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வாராந்திர ஆய்வுக் கூட்டத்தில் டெங்கு தடுப்பு பணிகளுக்காகவும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காகவும் சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர், கிருமிநாசினிகள் ஆகியவை போதிய அளவில் இருப்பு வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது சுகாதார பிரிவில் தற்போது குறைந்த அளவே மேற்படி பொருட்கள் இருப்பு உள்ளது. எனவே மேற்படி முன்னெச்சரிக்கை பணிகளுக்காகவும், டெங்கு தடுப்பு பணிகளுக்காகவும் இதர பொது சுகாதார பணிகளுக்காகவும் 10 டன் சுண்ணாம்பு, 2 டன் பிளிச்சிங் பவுடர் மற்றும் 20 லிட்டர் கிருமிநாசினிகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 806//2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 573** **நாள் 12.09.2019**
**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 5**

துப்புரவு பணியாளர்கள் வேலைவாய்ப்பு கட்டுப்பாடுகள் மற்றும் சேவை நிபந்தனைகள் விதி 2012 மற்றும் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் தடை சட்டம் 2013 ஆகியவற்றின்படி துப்புரவு பணியாளர்களுக்கு வருடந்தோறும் அவர்களுக்கு எவ்வித நோய் தொற்றும் ஏற்படாமல் இருக்க ஏதுவாக பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். எனவே இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களுக்கு ஒளிரும் சட்டை, கையுறை, காலுறை, முகக்கவசம், மற்றும் மழைதடுப்பு சட்டை ஆகியவை வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 793/2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 574** **நாள் 12.09.2019**
**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**ஓம் / திரு.ந.குமரன்**
**ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**

**/உ.ந.உ.ப./**

**ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**

## நகர் மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2019ம் தேதி திங்கட்கிழமை மாலை 11.30 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 575** **நாள் 30.09.2019**
**அலுவலக குறிப்பு:- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 576** **நாள் 30.09.2019**
**அலுவலக குறிப்பு:- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்ஹப மற்றும் பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்கு 27.09.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பொருளின் அளவு | விலை |
|---|---|---|---|
| 1 | R.R. Traders Trichy | பிளிச்சிங் பவுடர் 1 KG | 68.00 |
| | | லைம் பவுடர் 1 KG | 9.80 |
| | | பிளாக் பினாயில் 1 KG | 76.00 |
| | | | |
| 2 | Om Sakthi Traders Trichy | பிளிச்சிங் பவுடர் 1 KG | 68.80 |
| | | லைம் பவுடர் 1 KG | 10.20 |
| | | பிளாக் பினாயில் 1 KG | 77.00 |

மேற்கண்டவாறு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள R.R. Traders Trichy நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்

(ந.க.எண் /2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:-** 577 **நாள்** 30.09.2019

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்** 4

.இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களுக்கு ஒளிரும் சட்டை, கையுறை, காலுறை, முகக்கவசம் மற்றும் மழைதடுப்பு சட்டை ஆகியவை வாங்கிட 27.09.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பொருளின் அளவு | விலை |
|---|---|---|---|
| 1 | R.R. Traders Trichy | ஒளிரும் சட்டை | 1300 |
| | | கையுறை | 550 |
| | | காலுறை | 1230 |
| | | முகக்கவசம் | 295 |
| | | மழைதடுப்பு சட்டை | 1350 |
| | | | |
| 2 | Om Sakthi Traders Trichy | ஒளிரும் சட்டை | 1890 |
| | | கையுறை | 670 |
| | | காலுறை | 1380 |
| | | முகக்கவசம் | 320 |
| | | மழைதடுப்பு சட்டை | 1810 |

மேற்கண்டவாறு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள R.R. Traders Trichy நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்

(ந.க.எண் /2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:-** 578 **நாள்** 30.09.2019

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 5**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான புகைபோக்கி இயந்திரம் வாங்குவதற்கு 27.09.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| 1 | Ganam Environment Service | 1,49,000 |
| 2 | Green Agro Environment Services | 1.49.900 |

மேற்கண்டவாறு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள Ganam Environment Service நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்

(ந.க.எண் /2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 579** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 6**

இந்நகராட்சி உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை 20 அடி நீளம், 5 அடி அகலம், 5 அடி உயரமாக மாற்றும் பணிக்கு 27.09.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு மணி நேரத்திற்கு JCB இயந்திரத்தின் வாடகை |
|---|---|---|
| 1 | ஆர்.விஜயகுமார் எர்த் மூவர்ஸ் | 249 |
| 2 | போனான்ஸா எர்த் மூவர்ஸ் | 255 |

மேற்கண்டவாறு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆர்.விஜயகுமார் எர்த் மூவர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்

(ந.க.எண் /2019/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 580** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 7**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN 50 U 0518 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெற்று தரும் பணிக்கு 27.09.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | ஏ ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 59,696 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 64,350 |

மேற்கண்டவாறு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஏ ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்

(ந.க.எண் 329/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 581** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

இந்நகராட்சிப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு 1998 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பொது வரி சீராய்வின்போது அரசினால் கட்டிட வரிவிதிப்பு செய்திட அறிவுறுத்தி பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி இந்நகராட்சியில் சொத்துவரி விதிப்பதற்கு கீழ்குறிப்பிட்டுள்ள விகிதத்தின் அடிப்படையில் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**1998 ஆம் வருட சீராய்வு செய்யப்பட்ட மண்டல மதிப்பு**

| மண்டலம் (Zone) | விபரம் | அடிப்படை மதிப்பு சதுர அடிக்கு |
|---|---|---|
| Zone - I - B | வணிகப்பகுதி | 3.50 |
| Zone - II - C | குடிசைப்பகுதி | 0.25 |
| Zone - III - A | குடியிருப்பு பகுதி | 1.00 |

மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மண்டல மதிப்பின் விகிதம் நடைமுறைப்படுத்திட இயலாத வகையிலும் புதிய கட்டுமுனங்களுக்கு வீட்டு வரியினை விதித்து நகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்கு இயலாதவாறு அமைந்துள்ளதாலும் மற்றும் அனைத்து வகை கட்டுமானங்களுக்கும் ஒரே சீராக வரிவிதிப்பு செய்ய இயலாத காரணத்தாலும், கீழ்குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் அடிப்படை மண்டல மதிப்பு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நிர்ணயம்

செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்பினை 26.07.2002 ஆம் ஆண்டில் நகரமன்றம் தனது தீர்மான எண் 837ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டல வகை | அடிப்படை மதிப்பு சதுர அடி |
|---|---|---|
| 1 | அ. மண்டலம் | 0.75 காசு |
| 2 | ஆ. மண்டலம் | 0.70 காசு |
| 3 | இ. மண்டலம் | 0.60 காசு |
| 4 | ஈ. மண்டலம் | 0.50 காசு |

மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பின் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்வதற்கு அரசிடம் அனுமதி பெறாததால் 2008 மற்றும் 2018 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின்போது 1998 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி மண்டல மதிப்பின் அடிப்படையில் மீண்டும் மண்டல அடிப்படை மதிப்பு 2018 ஆம் ஆண்டு கீழ் கண்டவாறு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

| மண்டலம் | 01.04.2018ல் மாற்றம் செய்யப்பட்ட மண்டலம் | 01.04.2018ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| B-Zone | A | 5.40 |
| A-Zone | B | 1.80 |
| C- Zone | C | 0.60 |

மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மண்டல மதிப்பு கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக இந்நகராட்சிப் பகுதியில் உள்ள பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் அனைத்து பள்ளிவாசல் நிர்வாகத்திடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் சுமார் 313 ஆட்சேபணை மனுக்கள் வரப்பட்டுள்ளது. புகார் மனு ஆய்வு செய்யப்பட்டதில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில் அடிப்படை மண்டல மதிப்பு உயர்வு செய்யப்பட்டுள்ளதில் கூத்தாநல்லூர் நகராட்சி அடிப்படை மண்டல மதிப்பு மிக மிக கூடுதலாக உயர்வு செய்யப்பட்டுள்ளதாலும், அதனை ரத்து செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அடிப்படை மண்டல மதிப்பு திருத்தம் செய்தும் 2002 ஆம் ஆண்டில் இந்நகராட்சிப் பகுதியில் உள்ள தெருக்களை அ,ஆ,இ,ஈ என 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளதை 2018 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின்போது (ஈ) மண்டலத்தில் உள்ள தெருக்களை (இ) மண்டலத்துடன் இணைக்கப்பட்டு தற்போது அ,ஆ,இ என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்ட தெருக்களும் மற்றும் புதிதாக சேர்க்கப்பெற்ற தெருக்களின் அடிப்படையில் 2002 ஆம் ஆண்டில் திருத்தம் செய்து நகரமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட சொத்துவரி மண்டல மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு தற்போது 100 சதவிகிதம் உயர்வு செய்து கீழ்குறிப்பிட்டுள்ள விகிதத்தில் அடிப்படை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| மண்டலம் (Zone) | அடிப்படை மதிப்பு சதுரஅடி |
|---|---|
| Zone - I - B | 1.50 |
| Zone - II - C | 1.40 |
| Zone - III - A | 0.50 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2633/2018/அ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 582** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனம் 50,000 கி.மீ ஒருமுறை A/C சர்வீஸ் செய்ய வேண்டும். அதன்படி 50,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளதால் A/C சர்வீஸ் செய்யவும், மேலும் வாகனத்தில் உள்ள குளிர்சாதனத்தில் கூலிங் காயில் பழுதானதால் அதை புதிதாக மாற்றவும், வாகனத்தின் ஹாரன் ஒயரிங் கிட்டு மாற்றவும் உத்தேச செலவினம் ரூ.9,195/- ஆகும். மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு மேற்படி தொகை ரூ.9,195/- செலவீனம் செய்யப்பட்டு அதை தனக்கு வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகையினை ஓட்டுநருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 810/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 583** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

இந்நகராட்சிக்குட்பட்ட 6வது வார்டு உரக்கிடங்கில் குப்பைகளை காம்பவுண்ட் சுவர் அருகில் கொட்டிடவும், நகராட்சி அலுவலக கட்டிடத்தின் பகுதியில் உள்ள கருவேலமரங்களை அப்புறப்படுத்தவும்,நாகங்குடியில் உள்ள குடிநீர் குழாய் உடைப்பை சரி செய்யவும், பணங்காட்டாங்குடி குளம் தூர் வாரவும், கொரடாச்சேரி சாலையில் குடிநீர் குழாயினை பதித்திடவும், தோட்டச்சேரி,குனுக்கடி வாய்க்காலை சுத்தப்படுத்தவும், மேற்படி பணிகளை JCB இயந்திரம் கொண்டு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 584** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்** 11

இந்நகராட்சியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவிற்கு புதிய அலுவலக முன்புறம் புதிதாக சிமெண்ட் மேடை அமைத்து 20 Inch GI பைப் கொண்ட கொடிமரம் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 585** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்** 12

இந்நகராட்சிக்கு உட்பட்ட 12வது வார்டு ஔவை காலனியில் உள்ள சுகாதார மையத்தில் இயங்கி வந்த **1** HP மின் மோட்டார் பழுதடைந்து உள்ளது. அதனை சீர் செய்ய இயலாத நிலை உள்ளதால் புதிதாக 1 HP மின் மோட்டார் submersible வாங்கி பொருத்திட ஆகும் மதிப்பீடு ரூ.25,500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 586** **நாள் 30.09.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**ஒம் / திரு.ந.குமரன்**
**ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**

**/உ.ந.உ.ப./**

**ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**